[திரு. பெ. உத்திராபதி]

எதிர்க்கட்சியானது டில்லியிலே உட்கார்ந்து கொண்டு தேசப் பாதுகாப்பு என்ற பெயரால் தொழிலாளர் விரோதச் சட்டத்தை கொண்டு வந்த போது திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளு மன்றத்தில் ஆதரிக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு என்ன அர்த்தம் இருக்கிறது. ஒன்றைக்கு ஆளும் கட்சியும் பிர தான எதிர்க் கட்சியும் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக இருக்கக் கூடிய இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தருவதைக் கண்டித்து விடைபெறுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் பேசுகிறபோது இந்திரா காங்கிரஸ் இளை ஞர்களும் மற்றவர்களும் போலிசாருடன் சேர்ந்து கொண்டு வன் முறையில் ஈடுபட்டார்கள் என்று சொன்ன குற்றச்சாட்டைப் பற்றி அரசு விசாரித்து தங்களுடைய பதிலிலே விளக்கம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறு நாள் 8—2—1982 ஆம் தேதி காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2·04 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது

6. பேரவையின் முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் ஏதுவுமில்லை

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

18. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் 21—1—1981 முதல் 15—5—1981 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.

TRUTH ALONE TRIUMPHS